இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 15-04-2025

# ஆளுநர் இல்லாமல்…

தமிழ்நாடு ஆளுநர் ரவி, நிறுத்தி வைத்த 10 மசோதாக்கள் சட்டம் ஆவதாக தமிழ்நாடு அரசின், அரசிதழில் கம்பீரமாக அறிவிக்கப்பட்டு விட்டது. உச்சநீதிமன்றம் வழங்கிய மாபெரும் தீர்ப்பின் அடிப்படையில் இது நடந்துள்ளது.

தமிழ்நாட்டின் வரலாற்றில் ஆளுநர் கையெழுத்து இல்லாமல் 10 மசோதாக்கள் நிறைவேறியது என்ற மகத்தான சாதனையைச் செய்து விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஆளுநரால் நிறுத்தி வைக்கப்பட்ட 10 மசோதாக்களுக்கு சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்து தீர்ப்பு வழங்கி இருந்தது.

**“அரசமைப்புச் சட்டம் 142 ஆவது பிரிவின்படி உச்சநீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களை ஒப்புதல் தரப்பட்டவையாக நாங்கள் அறிவிக்கிறோம். நீண்ட காலமாக மசோதாவை நிலுவையில் வைத்திருந்த ஆளுநர், அதனை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்ததன் மூலமாக நேர்மையற்ற செயல் செய்துள்ளார். இதுபோன்று பஞ்சாப் அரசு தாக்கல் செய்த வழக்கில் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை தந்தது. அன்றைய தினம், குடியரசுத் தலைவருக்கு தமிழ்நாடு ஆளுநர் திருப்பி அனுப்பி இருக்கிறார். எனவே, மசோதாக்கள் மறுபரிசீலனைக்கு எப்போது தமிழ்நாடு அரசால் அனுப்பி வைக்கப்பட்டதோ, அந்த நாளில் இருந்தே அவை ஒப்புதல் அளிக்கப் பட்டதாக அறிவிக்கப்படுகின்றன”** என்று உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் ஜே.பி.பார்த்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு தீர்ப்பு அளித்தது.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையில்தான் 10 மசோதாக்களும் அரசிதழிலில் வெளியாகி இருக்கின்றன. மசோதாக்களை ஆளுநருக்கு தமிழ்நாடு அரசு அனுப்பிவைத்த 2023 நவம்பர் 13 ஆம் தேதியில் ஒப்புதல் அளித்ததாக கருத வேண்டும் என அரசிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் தமிழ்நாடு அரசுக்கு உள்ளது என்ற சட்டம் ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. இனிமேல் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் தமிழ்நாடு முதலமைச்சரின் வசமாகி உள்ளது.

தன்னை ஏதோ இந்த நாட்டின் வேந்தரைப் போல நினைத்துக் கொண்டு ஆடிக் கொண்டிருக்கிறார் ஆளுநர். அதற்கு உச்ச நீதிமன்றம் தடுப்பணை போட்டுள்ளது.

பத்து மசோதாக்களுக்கு உச்ச நீதிமன்றம் எப்படி ஒப்புதல் வழங்கலாம் என்று சில அதிமேதாவிகள் சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். ‘உன் மூக்கைத் தொடு’ என்றால், ஓடிப் போய் ஆளுநரின் மூக்கைத் தொடும் ரகங்கள் இவை.

உச்ச நீதிமன்றம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன் படுத்தித்தான் இந்த முடிவை எடுத்துள்ளதே தவிர தன்னிச்சையாக அல்ல.

பேரறிவாளன் விடுதலை விவகாரத்திலும் அரசமைப்பு விதி 142 தான் பயன்படுத்தியது உச்சநீதிமன்றம். மாநில அரசின் 161 ஆவது பிரிவின் உரிமையைக் காக்க நாங்கள் 142 ஆவது பிரிவைப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் பேரறிவாளன் வழக்கில் நீதிபதிகளின் இறுதி முடிவு ஆகும்.

“ In exercise of our power under Article 142 of the Constitution, we direct that the Appellant is deemed to have served the sentence in connection with Crime No. 329 of 1991” என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய், நாகரத்தினா ஆகிய இருவரும் சொன்னார்கள்.

**“அரசியல் சாசனம் பிரிவு 142 இன் படி முழுமையான நீதியை வழங்குவதற்குத் தேவையான எந்தத் தீர்ப்பையும் அல்லது உத்தரவையும் உச்சநீதிமன்றம் வழங்கலாம்.”** என்று உச்ச நீதிமன்றத்தின் அந்த அமர்வு சொன்னது. அதைத்தான் இந்த அமர்வும் சொல்லி இருக்கிறது. சட்டப்படி யார் நடக்க மாட்டார்களோ, அவர்கள் விஷயத்தில் சட்டப்படி உச்ச நீதிமன்றம் நடக்கும் என்பதை உறுதி செய்துள்ளது உச்ச நீதிமன்றம்.

415 பக்கங்கள் கொண்ட, பார்த்திவாலா, மகாதேவன் அமர்வு தனது தீர்ப்பில், 10 சட்ட மசோதாக்களுக்கு சட்ட அங்கீகாரம் அளித்தது ஏன் என்பதை உச்ச நீதிமன்றம் விளக்கியிருக்கிறது.

**“அரசமைப்புச் சட்ட அதிகார அமைப்புகள் என்பவை அரசமைப்புச் சட்டத்தால் படைக்கப்பட்டவை. அதனால் பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளுக்குக் கட்டுப் பட்டவை. எந்தவொரு அதிகாரமும், அதன் அதிகாரங்களைப் பயன்படுத்துவதிலோ அல்லது துல்லியமாகச் சொன்னால், அதன் கடமைகளை நிறைவேற்றுவதிலோ, அரசமைப்புச் சட்டக் கட்டுப்பாட்டை மீற முயற்சிக்கக்கூடாது. ஆளுநர் அலுவலகமும் இந்தக் கட்டளைக்கு விதிவிலக்கல்ல.**

**அரசமைப்புச் சட்ட வரம்புகளுக்கு அப்பால் செல்ல எந்தவொரு அதிகார அமைப்பும் முயற்சிக்கும் போதெல்லாம், நீதித்துறையானது சீராய்வு அதிகாரத்தைச் செயல்படுத்துவதன் மூலம் அரசமைப்புச் சட்ட ரீதியாக அனுமதிக்கப் பட்ட வரம்புகளுக்குள் அதிகாரத்தை மீண்டும் கொண்டு வரவும், அரசமைப் புச் சட்டக் காவலராகச் செயல்படவும் இந்த நீதிமன்றத்திற்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

**அரசமைப்புச் சட்ட உறுப்பு 142 இன் கீழ் உள்ள எங்கள் அதிகாரத்தை நாங்கள் சாதாரணமாகவோ அதைப் பற்றி ஆழமாகச் சிந்திக்காமலோ பயன் படுத்தவில்லை. முழுமையான நீதி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான ஒரே வழி இதுதான்.”** என்றும் நீதிபதிகள் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள்.

எனவே நீதியை நிலைநாட்டி இருக்கிறது உச்சநீதிமன்றம். அதன்படி சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களும் நிறைவேறிவிட்டன. இதில் என்ன சிறப்பு என்றால் , **‘ஆளுநரின் கையெழுத்து இல்லாமல்’**. அதுதான் சிறப்பு.

**கொடியேற்றும் தகுதியைப் பறித்தார் அன்றைய முதல்வர் கலைஞர். கையெழுத்துப் போடும் தகுதியைப் பறித்தார் இன்றைய முதல்வர். ஆளுநர்களை அவர்கள் பதவியில் உட்கார வைத்துக் கொண்டே ‘தகுதி நீக்கம்’ செய்வது என்பது இதுதான்!**





அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135–வது பிறந்த நாளையொட்டி கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் – அண்ணல் அம்பேத்கர் படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்து ‘சமத்துவ நாள்’ உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், தலைமை நிலைய அலுவலகச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று உறுதிமொழி ஏற்றனர்.

### திராவிட மாடல் பயணத்தில் – பாபா சாகேப் விரும்பிய

# சமத்துவ இந்தியா கண்டே தீருவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஏப். 15 – ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இலக்கை நோக்கிய நமது திராவிட மாடல் பயணத்தில் பாபா சாகேப் விரும்பிய சமத்துவ இந்தியா கண்டே தீருவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணல் அம்பேத்கர் பிறந்த தினத்தையொட்டி தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.**

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான சமத்துவ நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**சாதி எனும் ஆயிரமாண்டு அழுக்கினை அறிவெனும் தீப் பந்தம் கொண்டு பொசுக்கிய புரட்சியாளர் தனக்குவமை இல்லாத புத்துலகப் புத்தர் சட்ட மாமேதை அம்பேத்கர் பிறந்த நாள்… சமத்துவ நாள்!**

**ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நம் பயணத்தில் என்றும் நம்மை வழிநடத்தும் அறிவுலகச் சூரியன் அம்பேத்கர் வாழ்க!**

**‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இலக்கை நோக்கிய நமது திராவிட மாடல் பயணத்தில், பாபா சாகேப் விரும்பிய சமத்துவ இந்தியா கண்டே தீருவோம்! ஜெய் பீம்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## வேப்பந்தட்டையில் தண்ணீர் பந்தல்!

பெரம்பலூர், ஏப்.15 –

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம் சார்பில், தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி., வழிகாட்டுதலோடு, வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், கிருஷ்ணாபுரத்தில் பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் கோடை கால நீர், மோர் மற்றும் தண்ணீர் பந்தலை, ஒன்றிய கழகச் செயலாளர் செ.நல்லதம்பி தலைமையில், பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு திறந்து வைத்து, பொதுமக்களுக்கு தர்பூசணி,வெள்ளரி, நீர்,மோர் ஆகியவற்றை வழங்கினார்கள்.

இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியக் கழக அவைத்தலைவர் அம்பேத்கர், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் க.ரமேஷ், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் க.ராமலிங்கம், முன்னாள் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ், நகர மருத்துவ அணி அமைப்பாளர் சிலம்பரசன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராமகிருஷ்ணன் கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் தங்கராஜ் மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பரமசிவம், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் மாயகிருஷ்ணன் ,

முன்னாள் ஒன்றியக் கவுன்சிலர்கள் கீதா ராமகிருஷ்ணன், குணசேகரன், மாவட்டப் பிரதிநிதிகள் எஷ். அழகுவேல்,புதூர் மணி, SPS செல்வம், வேப்பந்தட்டை ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.கணேசன், சிவக்குமார், வெங்கலம் ஊராட்சி கிளைச் செயலாளர்கள் சின்னத்தம்பி, பன்னீர்செல்வம், சரவணன், ஜெயராமன்,சக்திவேல், மணிகண்டன் மற்றும் அனைத்து அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், அனைத்து கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும்
மக்கள் கல்வி அறக்கட்டளை
டாக்டர் அம்பேத்கர் அகாடமி
இணைந்து நடத்தும்
டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை சொற்பொழிவு
நாள் : 15-04-2025 செவ்வாய், மாலை 3.00 மணியளவில்
இடம் : சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு கட்டிடம்
சிறப்பு சொற்பொழிவு
மாண்புமிகு
திரு ஆ.இராசா அவர்கள்
நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர்
தலைப்பு: Dr. Ambedkar's Contribution to Social, Political and Constitutional Thought in Indian Polity
தலைமை
பேராசிரியர் முனைவர்
எஸ்.ஏழுமலை
பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்
வரவேற்புரை
திரு சி.செல்லப்பன் ஐ.ஏ.எஸ் ஓய்வு
மேலாண்மை அறங்காவலர், டாக்டர் அம்பேத்கர் அகாடமி
நோக்க உரை
பேராசிரியர் முனைவர்
எஸ்.தேவதாஸ்
இணை மேலாண்மை அறங்காவலர், டாக்டர் அம்பேத்கர் அகாடமி
நன்றியுரை
முனைவர் ஜி.ராஜசேகர்
துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்
அன்புடன் வரவேற்கும்
தமிழ் மாணவர் மன்றம்
சென்னைப் பல்கலைக்கழகம்
TSC TAMIL STUDENT COUNCIL